<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>
**<u>O.S. .No.273/2022</u>**

பெயர் :– லெட்சுமிநாராயணன், (P.W.–1)
த/பெ. :– ஆராமுதன்
தேதி :– 12.06.2025.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை</u>:–**

தாவா சொத்து குளம்புறம்போக்கு என்ற வகைப்பாட்டில் உள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குளங்களும் அரசுக்கு சொந்தமானது என்ற மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பாகி அதன் அடிப்படையில் சட்டம் உள்ளது என்பதுபற்றி தெரியுமா என்றால் தெரியாது. தாவா குளத்தை சுற்றியும் நகராட்சியில் ரோடு போடப்பட்டுள்ளது என்றால் குளத்தை சுற்றி காண்கிரீட் ரோடு போடப்பட்டுள்ளது. ரோடு என்றால் இருசக்கர வாகனங்கள், நான்கு சக்கர வாகனங்கள் செல்லக்கூடிய இடத்தை தான் ரோடு என்று பொதுவாக கூறுவார்கள் என்றால் சரிதான். குளத்தை சுற்றி போடப்பட்டுள்ளதாக கூறப்படும் ரோட்டில் அவ்வாறு பயன்பாட்டில் உள்ளதா என்றால் இல்லை. அந்த குளத்தை நான் சமீபத்தில் ஒரு மாதத்திற்கு முன்பு சென்று பார்த்தேன். குளத்தை சுற்றி படித்துறை கட்டப்பட்டு கம்பி வேலி போடப்பட்டு பிளாட்பாரம் போல் நடப்பதற்கு அமைக்கப்பட்டுள்ளது. அது ரோடு இல்லை என்றால் சரிதான். எங்கள் பிராதில் சொல்லியுள்ளவாறு அது ரோடு கிடையாது என்றால் சரிதான்.

அது பொது நடைபாதையும் கிடையாது என்றால் சரிதான். நீர்நிலை பொரம்போக்கினை துர்க்கவோ, அதை பகுதிக்கு கொடுத்து வீடு கட்டிக்கொள்ள சொல்வதோ சட்டத்திற்கு புறம்பான செயல் என்றால் சரியல்ல. அது ஆரம்ப காலத்திலிருந்தே இருந்துகொண்டு இருக்கிறது. எங்கள் காலத்தில் அது நடக்கவில்லை. 100 வருடத்திற்கு முன்பே அந்த காலத்திலேயே மனைப்பகுதியாக கொடுத்துள்ளார்கள். அந்த இடம் நீர்நிலை பகுதியாக இருந்தால் பகுதியை ரத்து செய்ய தயாராக இருக்கிறோமா என்றால் நாங்கள் ரத்து செய்ய முடியாது. நாங்கள் நீர்நிலை பகுதியில் இல்லை. நகராட்சி ஆணையர் தாக்கல் செய்த எதிருரையை படித்துப்பார்தேனா என்றால் படித்துப்பார்த்தேன். அந்த எதிருரையில் மயிலாடுதுறையில் இந்த குளம் உட்பட 83 குளங்களை மயிலாடுதுறை நகராட்சியிடம் வருவாய் கோட்டாச்சியர் மற்றும் மாவட்ட ஆட்சியர் பராமரிப்புக்காக ஒப்படைத்துள்ளார் என்ற விபரத்தை தெரிந்துகொண்டீர்களா என்றால் தெரிந்துகொண்டேன். இந்த எதிருரைக்கு பிறகு வருவாய் கோட்டாச்சியரையோ, மாவட்ட ஆட்சியரையோ வழக்காடிகளாகவோ சேர்த்து அவர்கள் போட்ட உத்தரவு தவறு என்று பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் இல்லை. நகராட்சியிடம் உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரியுள்ளேன்.

எங்களால் பகுதிக்கு கொடுக்கப்பட்ட நான்கு பேர்களுக்கு நகராட்சி

நிர்வாகத்தால் நீர்நிலைகளில் குடியிப்பதாகக்கூறி அந்த இடத்தை காலிசெய்ய அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வாசாஆ1 மற்றும் வாசாஆ3 ஆவணங்கள் அனைத்தும் 1950 ஆம் ஆண்டுக்குட்பட்டது. வாசாஆ3ல் உள்ள சர்வே எண் 1057 ஆனது 1054 ஆக திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாசாஆ1 ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ஆதிகாலத்திலிருந்தே உள்ள ஆவணம் ஆகும். வழக்கிடை சொத்தில் சுவர் ஏதுவும் எழுப்பப்படவில்லை என்றால் தடுப்பு சுவர் எழுப்பியுள்ளார்கள். தடுப்பு சுவர் என்பது வேறு, ரிவிட்மெண்ட் என்பது வேறு என்றால் சரிதான். ரிவிட்மெண்ட் என்றால் Retaining wall என்றால் குளத்து கரை மணல் சரியாமல் இருக்க குளம் பாதுகாப்பிற்காக கட்டப்படுவதாகும். Retaining wall கட்டினால் குளம் ஆக்கிரமிப்பு இல்லாமலும்., துர்க்கப்படாமலும் பாதுகாக்கப்படும் என்றால் சரிதான்.

நீர்நிலைகளை அரசாங்கத்தை தவிர தனியார்களோ, டிரஸ்டுகளோ யாரும் இப்போது உள்ள சட்டப்படி உரிமைக்கொண்டாட முடியாது என்றால் சரிதான். நாங்கள் தனியார் கிடையாது. அது ஆதீனத்திற்குரிய திருக்கோவில் சுப்ரமணிய சுவாமி கோவிலுக்கு சொந்தமானது ஆகும். அதில் ரோடு அமைத்து பொதுப்பாதையாக அனுமதிக்கப்படவில்லை என்றால் சரிதான். நாங்கள் ஆக்கிரமிப்புக்காரர்கள் என்று எங்களுக்கு எந்தவித நோட்டீஸும் வரவில்லை. மேற்படி குளம் மாவட்ட ஆட்சியரின் உத்தரவு படி நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால் எங்களுக்கு எந்தவித உத்தரவும் கொடுக்க வில்லை. அவர்களாகத்தான் எடுத்துக்கொண்டார்கள். மேற்படி குளம் தேசிய பசுமை தீர்ப்பாய வழக்குகளில் ஏற்பட்ட உத்தரவின் படியும், சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண் WP No.2386/2020ன் படியும் 31.08.2022 தேதிய உத்தரவு படியும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவு படியும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டது என்றால் இந்த சட்டம் எங்களுக்கு பொருந்தாது. அது ஆதினம் திருக்கோவிலுக்கு சொந்தமான இடம். தனியார் இடம் கிடையாது. தாவா இடத்தில் எந்தவித ரோடும் அமைக்கவில்லை, மதில் சுவரும் அமைக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கானது வழக்கு மூலம் இல்லாத காரணத்தினால் தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. இந்த குளத்தை பாராமரிப்பதற்காக எவ்வளவு ரூபாய் செலவு செய்யப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த குளம் எங்கள் கட்டுப்பாட்டிலும்., எங்கள் பராமரிக்கப்பட வில்லை என்றால் சரியல்ல. மேற்படி நீர்நிலையை சரியாக பராமரிக்கப்பட வில்லை என்பதால் சரியல்ல. இந்த வழக்கானது உரிய நபர்களை சரியாக வழக்கில் சேர்க்காத காரணத்திற்காகவும் தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.